1972 ஆகஸ்ட் 21]

களின்படி, தொழிலாளர்கள் 21—3—1972-லிருந்து வேலைக்குத் திரும்ப வேண்டும், தொழிலாளர்களுக்கு 5—2—1972 நிலவரப்படி கொடுக்கப்படும் ஊதியத்தில் 20 சதவீதம் தற்காலிக உயர்வு 21—3—1972லிருந்து கொடுக்கப்பட வேண்டும்; வேலைச் சுமையை முடிவு செய்யும் பிரச்சனை சென்னை உற்பத்தித்திறன் குழுவின் முடிவிற்கு விட்டுவிடப்பட வேண்டும்; மேற்சொன்ன குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் மேற்கொண்டும் சமரசப் பேச்சு வார்த்தைகள் தொழிலாளர் நல அதிகாரி முன்னிலையில் நடத்தப்பட வேண்டும்; தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயல் படுத்துமாறு தங்கள் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துவதாகவும், வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதற்காகத் தொழிலாளர்களைப் பழி வாங்குவதில்லை என்றும் நிர்வாகப் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டனர்.

E.S.I. Hospital, Coimbatore.

* 140. *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) the number of beds provided at the E.S.I. Hospital, Coimbatore ; and

(*b*) the number of beds sanctioned at the time of construction of the Hospital ?

கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் எவ்வளவு படுக்கை வசதிகள் உள்ளன?

(இ) மருத்துவ மனை கட்டப்படுகிறபோது எவ்வளவு படுக்கை களைக் கொண்டதாக கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) 300 படுக்கை வசதிகள் உள்ளன.

(இ) 500 படுக்கைகள் கொண்டதாகக் கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டது.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, அனுமதி வழங்கப் பட்ட ஐநூறு படுக்கைகளையும் பெறுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுமா? மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

[1972 ஆகஸ்ட் 21

மாண்புமிகு திரு. என். வி. நடராாசன்: தலைவரவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஈ:எஸ்.ஐ. கார்ப்பொரேஷன் அதற்கு வேண்டிய நிதியினைத் தருவதற்கு முன்வரவில்லை. எனவே தடைப்பட்டிருக்கிறது.

Labour Welfare Board.

* 141 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the works taken up by the Labour Welfare Board so far ; and

(*b*) the works proposed to be taken up further?

தொழிலாளர் நல வாரியம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிலாளர் நல வாரியம் தற்போதுவரை மேற்கொண்ட பணிகள் யாவை?

(இ) மேலும் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் எவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராாசன்: (அ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் தேவையான பணியாளர்களுடன் மூன்று தொழிலாளர் நல நிலையங்கள் முறையே 15—1—1972, 14—1—1972, 21—2—1972 ஆகிய நாட்களில் தொடங்கப்பட்டன. தொழிலாளர்களின் மனைவியர்க்குத் தையற்கலை வகுப்புகளும் தொழிலாளர் குழந்தைகளின் நலனுக்காக பாலர் பள்ளிகளும் நடத்துவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(இ) சென்னை, செம்பியத்தில் அல்லது செம்பியம் போன்று தொழிலாளிகள் அதிகம் வசிக்கும் இடங்களில் தொழிலாளர்களுக்கு விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் தொழிலாளர் நிறுவனத்தையும் தொழிலாளர் நலப் பிரிவையும் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.